சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.28.04.2026.

OS.No. 92/2024

DW2 : வனிதா (வயது 40 ) த/பெ.வைரபெருமாள்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் மண்ணச்சநல்லூர் தாலுக்கா, துணை வட்டாட்சியராக கடந்த 6 மாத காலமாக பணியில் இருக்கிறேன். எனது தரப்பு வாக்குமூலத்தை எழுத்துமூலமாக நிருபண வாக்குமூலமாக சமர்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். கிராம எண்.14 மண்ணச்சநல்லூர் புல எண்.86 க்கான 10.07.2025 ஆம் தேதியிட்ட புல வரைபடம் சான்று நகல் **பி.வா.சா.ஆ.1**. கிராம எண்.14 மண்ணச்சநல்லூர் அ பதிவேடு சான்று நகல் **பி.வா.சா.ஆ.2**. கிராம எண்.14 மண்ணச்சநல்லூர் செட்டில்மெண்ட் ஜமாபந்தி சிட்டா சான்று நகல் **பி.வா.சா.ஆ.3**. கிராம எண்.14 மண்ணச்சநல்லூர் 1434 ஆம் பசலி அடங்கல் சான்று நகல் **பி.வா.சா.ஆ.4**. தாவா தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**கு.வி**

எதன் அடிப்படையில் வருவாய் ஆவணங்கள் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் தண்ணீர் பந்தல் தர்மம் என்ற பெயரில் மாற்றப்பட்டது என்றால் 1987 ஆம் வருட யுடிஆர் அ பதிவேட்டில் சமயபுரம் மாரியம்மன் தண்ணீர் பந்தல் தர்மம் என்ற பெயரில் மேற்படி சொத்து பதிவாகியுள்ளது. அருள்மிகு மாரியம்மன் தண்ணீர் பந்தல் தர்மம் என்ற பெயரில் மாற்றப்பட்டது ஆவணங்களின் அடிப்படையிலா அல்லது மனுவின் அடிப்படையிலா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. இது சம்மந்தமான வருவாய் ஆவண கோப்புகள் ஏதேனும் எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் இல்லை. யாரேனும் மேற்படி தாவா சொத்து குறித்து மனு ஏதேனும் தாக்கல்

செய்துள்ளார்களா அது சம்மந்தமான விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் அது பற்றி தெரியவில்லை. எங்கள் அலுவலகத்தில் அதை பற்றி கூறும் அதிகாரம் பெற்ற நபர் யார் என்றால் வட்டாட்சியர். என்னால் அது பற்றி கூற முடியுமா என்றால் முடியும். அவ்வாறு ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இல்லை. தாவா சொத்து வருவாய் பட்டா பதிவு மாற்றம் சம்மந்தமாக மனு கொடுத்த ஆவண பதிவுகள் எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் லால்குடியிலிருந்து மண்ணச்சநல்லூருக்கு மேற்படி சொத்திற்கான யுடிஆர் பதிவுகள் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது. மற்ற விவரங்கள் அடங்கிய ஆவண கோப்புகள் எதுவும் அனுப்பப்படவில்லை.

எதாவது மனுவின் பேரில் வருவாய் ஆவணங்கள் மாற்றப்பட்டதற்கான உத்தரவு மற்றும் மனு நகல் ஆகியவை எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் இல்லை. உரிமையாளர் மற்றும் அவரது குடும்பத்தினர் சம்மதமின்றி தன்னிச்சையாக ஆவணங்களை பார்வையிடாமல் உரிமையாளரை விசாரிக்காமல் வருவாய் ஆவணங்கள் மாற்றப்பட்டது சட்டவிரோதமானது என்றால் சரியல்ல.

வருவாய் ஆவணங்களை வைத்து வருவாய் அலுவலர்கள் தாவா சொத்தில் வாதிகளின் சுவாதினத்தை இடையூறு செய்வது சட்ட விரோதமானது என்றால் சரியல்ல. இடையூறு எதுவும் செய்யவில்லை. அதனால் வாய்தா அல்லது தீர்வை வாதிகள் செலுத்துவதை மறுப்பதற்கோ அல்லது ரசீது வழங்காமல் இருப்பதற்கோ வருவாய் அலுவலர்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. உரிமையாளர் பெயரில் வருவாய் பதிவுகள் இல்லாத போது, பொதுவாக வருவாய் வரி பெறுவதில்லை.

தாவா சொத்து வாதியுடையது என்றால் சரியல்ல, வாதியுடையது என்பதற்கு ஆவணங்கள் இல்லை. வழக்கு சொத்தின் வருமானத்தைக்கொண்டு மாரியம்மன் ரத உற்சவ அன்னதானம் தண்ணீர் பந்தல் தர்மம் நடத்தவேண்டும் என்றும் அதற்கான பிணை வாதியின் ஆதி உரிமையாளர்களால் தாவா சொத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அது பற்றிய விவரங்கள் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணமான

22.04.1953 ஆம் தேதியிட்ட கிரய ஆவணத்தில் பக்கம் 1, 2 ல் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான். அதனால் தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

/ signed/
வனிதா

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.04.28 18:40:02 +0530

R.MOHANA
Digitally signed by R.MOHANA
Date: 2026.04.28 18:40:10 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி